# வளர்தமிழ் இலக்கியமன்றம் 2018 – 2019

## (சுயஉதவிப் பிரிவு)

நமது கல்லூரியில் தமிழ்த்துறையில் மாணவியரின் திறமையை வெளிப்படுத்தும் விதமாக வளர்தமிழ் இலக்கியமன்றத்தின் சார்பாகப் பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, தனிநடிப்பு ஆகிய போட்டிகள் 27.08.18 மற்றும் 28.08.18 தேதிகளில் நடைபெற்றன.

**பேச்சுப்போட்டி**

**“நாகரிகம் மனிதகுல வளர்ச்சியா? வீழ்ச்சியா?”** என்ற தலைப்பில் பேச்சுப்போட்டி நடைபெற்றது. பேச்சுப்போட்டிக்கு நடுவராக தாவரவியல் மற்றும் தாவர உயிர் தொழில் நுட்பவியல் துறைப் பேராசிரியர் முனைவர் அ.க. இரத்தினகுமாரி அவர்களும், மருத்துவச்சார் சத்துணவு மற்றும் உணவியல் துறைப் பேராசிரியர் திருமதி வை. சுபாஷினி அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி முடிவுகளை அறிவித்துப் போட்டிகளைச் சிறப்பான முறையில் நடத்திக் கொடுத்தனர்.

**கவிதைப் போட்டி**

மாணவியரின் கற்பனைத் திறனை வெளிப்படுத்தும் விதமாக **“பெரிதினும் பெரிதுகேள்”** என்ற தலைப்பில் கவிதைப் போட்டி நடத்தப்பட்டது. மாணவியரின் கவிதைகள் அனைத்தும் தமிழ்த்துறை (சுய உதவிப் பிரிவு) பேராசிரியர்களான முனைவர் சு. லட்சுமி மற்றும் முனைவர் கோ. பத்மவிலாசினி அவர்களால் பரிசுக்கான கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

**தனிநடிப்பு**

மாணவியர் நடிப்பின் மீது கொண்ட ஆர்வத்தினை வெளிப்படுத்தும் விதமாக **‘இலக்கிய மாந்தர்கள்’** என்ற தலைப்பில் தனிநடிப்புப் போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டிக்கு நடுவராக நிதி மற்றும் கணக்குப் பதிவியல் துறைப்பேராசிரியர் முனைவர் யோ. கலைவாணி அவர்களும் கணினி அறிவியல் துறைப்பேராசிரியர் முனைவர் ம. மஹாதேவி அவர்களும் நடுவர்களாகக் கலந்து கொண்டு, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பல தகவல்களைக் கூறி பரிசுகளை அறிவித்தனர்.

**பரிசு பெற்றவர் விபரம்**

| **வ.எண்** | **போட்டி** | **பரிசு** | **பெயர்** |
|---|---|---|---|
| 1. | **பேச்சுப் போட்டி** | முதல் பரிசு<br>இரண்டாம் பரிசு<br><br>மூன்றாம் பரிசு | மு. ஹர்ஷினி I B.Com. (C.S)<br>மு. ஆர்த்தி பிரபா I B.Com. (Hons.)<br><br>கு. பிரதீபா I B.Sc. Maths (Honours)<br>ம. சுகப்பிரதாயினி I B.Com. (ISM) |
| 2. | **கவிதைப் போட்டி** | முதல் பரிசு<br><br>இரண்டாம் பரிசு<br><br>மூன்றாம் பரிசு | பா. திவ்யா II B.Com. ‘D’<br><br>பா. வித்யா ஸ்ரீ III BCA. ‘B’<br><br>ஜா. சுவாதி II B.Sc. N&D |
| 3. | **தனிநடிப்பு** | முதல் பரிசு<br><br>இரண்டாம் பரிசு<br><br>மூன்றாம் பரிசு | பா. வைஷ்ணவி II B.Com. (A&F)<br>ஆ. கீர்த்தி I B.Com. (G)<br><br>ரா. ராஜப்பிரியா III BCA ‘B’ |




## நாடகமன்ற துவக்க விழா

நாடகப் பயிற்சிப் பட்டறை

29/01/19 அன்று நாடகமன்ற துவக்க விழாவும், ஒரு நாள் நாடகப் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் திரைப்படம் மற்றும் நாடகத்துறை உதவிப் பேராசிரியர் முதுமுனைவர் சி. கார்த்திகேயன் அவர்கள் மாணவர்களுக்கு நாடகப் பயிற்சியினை வழங்கினார். அதில் உரையாற்றிய சிறப்பு விருந்தினர் நாடகப் பயிற்சி என்பது மாணவிகள் எதிர்காலத்தில் வெளி உலகை சந்திக்கும் போது அவர்கள் ஒவ்வொரு சூழலிலும் எவ்வாறு நடந்து கொள்வது என்பதைக் கற்றுக் கொடுக்கும் களமாக அமையும் என்பதில் ஐயமில்லை என்றார். மாணவியர்களுக்கு கதைச் சொல்லல், உரத்தக் குரலில் ஏற்றத் தாழ்வுடன் பேசுதல், முகபாவனை, அங்க அசைவுகள், கற்பனைத் திறனை வளர்த்துக் கொள்ளும் விதம் மற்றும் தெருக்கூத்து பற்றியும் பயிற்சி அளிக்கப்பட்டது. நாடகப் பயிற்சியின் முடிவில் குறு நாடகம் நடத்திக் காட்டப்பட்டது. பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட மாணவியருக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.


வளர்தமிழ் இலக்கிய மன்றம்



# சிறப்பு விரிவுரை – 1

09/02/2019 அன்று காஞ்சிபுரம் அன்னை தெரசா கலை மற்றும் அறிவியல் கல்லூரிப் பேராசிரியர் இரா. ஹேமலதா அவர்கள் ‘தேர்வு அணுகுமுறையும் வழிகாட்டுதலும்’ என்ற தலைப்பில் சிறப்பு விரிவுரை வழங்கினார். அந்நிகழ்வின் போது மாணவர்கள் தேர்வுகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பதையும் அதற்கான வழிமுறைகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறினார். அதிக மதிப்பெண் இடம்பெறும் பாடப்பகுதியைப் படித்தால் எளிதில் வெற்றிக் கனியை எட்டலாம் என்றும் கூறினார்.



1. **சிறப்பு விரிவுரை** – பேராசிரியர் இரா. ஹேமலதா (09.02.2019)

# சிறப்பு விரிவுரை - 2

18/02/2019 அன்று கோல்ட்சிமித், லண்டன் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரும் (Tamil Chair UK) நிர்வாகக்குழு உறுப்பினருமான திரு சிவா பிள்ளை அவர்களால் ‘கணினி வழித் தமிழ்’ என்ற தலைப்பில் சிறப்பு விரிவுரை நடைப்பெற்றது. கணினி வழியாகத் தமிழ் மொழியினைக் கற்றுக்கொடுக்கும் வழிமுறையினையும் பிறமொழியினைக் கற்றுக் கொள்வதினால் ஏற்படும் பயன்களையும் எடுத்துரைத்தார். பிற நாட்டினர் தமிழை எளிதாகக் கற்றுக்கொள்ளும் வகையில் பார்த்தல், கேட்டல், வாசித்தல், ஆடல் வழி கற்பித்தல் முறையில் மாற்றம் கொண்டுவரலாம் என்பதை பல உதாரணங்கள் வழி எடுத்துக்கூறினார்.



2. **சிறப்பு விரிவுரை – பேரா. சிவாபிள்ளை** (18.02.2019) கோல்ட்சிமித், லண்டன் பல்கலைக்கழகம் Tamil Chair UK